செ.வெ.எண் : 324

3.6.2011

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (3.6.2011) தலைமைச் செயலகத்தில், தற்போது தமிழ்நாட்டில் நிலவும் மின் நிலைமை பற்றியும், மின் உற்பத்தி மற்றும் விநியோகத்தை மேம்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆய்வு செய்தார்கள். இக்கூட்டத்தில், மாண்புமிகு நிதித்துறை அமைச்சர், மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர், மாண்புமிகு சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், நிதித்துறை முதன்மைச் செயலாளர், எரிசக்தித்துறை முதன்மைச் செயலாளர், சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை செயலாளர், சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறையின் சிறப்புப் பணி அலுவலர், தமிழ்நாடு மின்வாரிய தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.